# முன்னுரை

தமிழ் மொழியின் தொன்மையும் வளமையும் இனிமையும் அதன் வாழ்வியல் கூறுகளும் வளமார்ந்த சிந்தனைகளும் உலக மொழிகளுக்கே வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன. சங்க காலம் முதல் இக்காலம் வரை தமிழ்மொழியில் பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் நம் மரபினையும் மாண்பினையும் பண்பாட்டினையும் உணர்த்தும் வகையில் நாட்டுப்புற இலக்கியங்கள் அமைந்துள்ளன.

நாட்டுப்புற இலக்கியங்கள் மனித வாழ்வின் முழுமையான தன்மையினைக் காட்ட வல்லனவாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் நாட்டுப்புற இலக்கியமும் தனி இடத்தினைப் பெற்றுள்ளது. மொழி வளமும் இலக்கிய வளமும் நிறைந்த நம் நாட்டில் சடங்குகளும் மிகுந்துள்ளன. மனிதனின் தேவைகளை அறிவு, நிறைவு செய்வதைப் போல மனிதனின் உணர்வுகளைச் சடங்குகள் நிறைவு செய்கின்றன. ஓர் இனத்தின், மதத்தின் பண்பாட்டைத் தெளிவாக அறிந்து கொள்வதற்குச் சடங்குகள் நமக்கு உதவுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டார மக்கள் பாரம்பரியமாகச் சடங்குகளைக் கடைப்பிடித்து வருகின்றனர். அவர்களின் வாழ்வியல் சடங்குகளை ஆய்வு செய்து அதன் மூலம் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வுத் தலைப்பு**

'கன்னியாகுமரி மாவட்ட விளவங்கோடு வட்டார மக்களின் வாழ்வியல் சடங்குகள்" என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு வட்டங்கள் உள்ளன. அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு என்பன அவை. இவற்றில் விளவங்கோடு வட்டம் 55 கிராமங்களை உள்ளடக்கியது. இக்கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் சடங்குகள் அவர்கள் பின்பற்றும் மதத்திற்கு ஏற்றாற்போல் அமைகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விளவங்கோடு வட்டார மக்களின் பிறப்புச் சடங்கு, பூப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, இறப்புச் சடங்கு முதலியன பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பொருள் விளக்கம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விளவங்கோடு வட்டத்தில் வாழும் மக்களின் வாழ்வியல் சடங்குகள் பெறும் இடத்தையும் அச்சடங்குகள் வாயிலாகப் பெறப்படும் உண்மைகளையும் விளக்கும் வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

தமிழ்ச் சான்றோர் செய்த செவ்விலக்கியங்களைப் போல மக்கள் இலக்கியமாக விளங்கும் நாட்டார் இலக்கியங்களும் பல அரிய செய்திகளைக் கூறுகின்றன. நாட்டார் இலக்கியங்கள் வெளிப்படுத்தும் மக்கள் வாழ்வியலை ஆராய்வதன் வாயிலாக அம்மக்களின் வாழ்க்கையின் முழுமையான பாரிமாணத்தையும் நம்மால் அறிந்து கொள்ள இயலும். அவர்கள் வாழ்க்கையில் பிறப்பு முதலாக இறப்பு வரை உள்ள வாழ்வியல் சடங்குகளில் மேற்கொள்ளப் பெறும் ஆய்வின் வாயிலாக வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளை அறிந்துகொள்ள முடிகிறது. குறிப்பாக, கன்னியாகுமாரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டார மக்களின் வாழ்வியலை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

**கருதுகோள்**

விளவங்கோடு வட்டார மக்கள் ஒரே வட்டத்தைச் சார்ந்திருந்தாலும் அவர்கள் ஒரே தன்மை உடையவர்களாய் வாழவில்லை. சாதிக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டாலும் சமயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாகக் காணப்படுகிறார்கள். பன்மயத்தன்மை கொண்ட விளவங்கோடு வட்டத்தில் வாழும் மக்களின் வாழ்வியல் சடங்குகளின் ஊடாகச் சமயம் உருவாக்கியுள்ள தாக்கத்தைக் கண்டறிவது இவ்வாய்வின் கருதுகோளாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு எல்லை**

கன்னியாகுமாரி மாவட்ட விளவங்கோடு வட்டார மக்களால் பிறப்பு முதல் இறப்பு வரை மேற்கொள்ளப்படும் சடங்குகள் இந்த ஆய்வின் எல்லையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வுக் களம்**

கன்னியாகுமாரி மாவட்ட விளவங்கோடு வட்டாரத்திற்குட்பட்ட கிராமங்கள் ஆய்வுக் களமாகக் கொள்ளப்பட்டுள்ளன. இந்து, கிறித்தவர், முகமதியர் வாழ்கின்ற பகுதி ஆய்வுக்களமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு மூலம்**

களப்பணி மூலம் தொகுக்கப்பட்ட இந்து, கிறித்தவர், முகமதியர் போன்றோரின் வாழ்வியல் சடங்குகள் தொடர்பான தரவுகள் முதன்மை ஆதாரங்களாகும். இந்து, கிறித்தவர், முகமதியர் இவர்களின் வரலாறு, பண்பாடு, சமயம், தொழில் பற்றி இந்நாள் வரை வெளியிடப்பட்ட வெளியிடப்படாத ஆய்வேடுகள் துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. நேர்காணல், உரையாடல் மூலம் சேகாரிக்கப்பட்ட செய்திகளும் துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வு அணுகுமுறை**

இந்த ஆய்வின் அணுகுமுறையாக விளக்கமுறை ஆய்வு மற்றும் கள ஆய்வு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சமயங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் விளவங்கோடு வட்டாரத்தில் காணப்படும் மக்களின் பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு முதலான சடங்குகள் விளக்க முறைக்கு உட்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பகுப்பு**

ஓர் ஆய்வினை மேற்கொள்ளும்போது பகுப்பு, முக்கிய இடத்தினைப் பெறுகிறது. ஆய்வுப் பொருளை உள்வாங்கிச் சாரியாகப் பகுத்து விட்டால் ஆய்வு மேல் நோக்கிச் செல்வது எளிமையாக அமையும். அந்த வகையில் இந்த ஆய்வேடு ஆய்வு வசதிக்காக முன்னுரை முடிவுரை நீங்கலாக ஏழு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை

1. கன்னியாகுமாரி மாவட்டத்தின் வரலாறு
2. சடங்குகள் ஒரு பார்வை
3. இலக்கியத்தில் சடங்குகள்
4. பிறப்புச் சடங்கு
5. பூப்புச் சடங்கு
6. திருமணச் சடங்கு
7. இறப்புச் சடங்கு

என்பவை ஆகும்.

## இயல்1 : கன்னியாகுமாரி மாவட்டத்தின் வரலாறு

குமாரி மாவட்டம் முற்காலத்தில் எவ்வாறு இருந்தது என்பது பற்றியும் இடைப்பட்ட காலத்தில் கேரளாவுடன் இருந்த வரலாறு பற்றியும் தமிழ் நாட்டுடன் இணைந்த வரலாறு குறித்தும் இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளது. குமாரி மாவட்டத்தின் குறிப்புகள் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குமாரிக் கண்டம் கடலில் மூழ்கியபின் எஞ்சியுள்ள நிலப்பரப்பு குமாரி மாவட்டமாகும். மக்கள் முதன்முதலில் தோன்றியது குமாரிக்கண்டத்தில்தான் என்று சான்றோர்கள் கூறுகின்றனர். இம்மாவட்டம் இடைப்பட்ட காலகட்டத்தில் கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டத்தில் இணைந்திருந்தது. பின்னர் மக்கள் பலர் போராடி 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் மறு சீரமைப்பின் போது குமாரி மாவட்டமாகத் திகழ்ந்தது. அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்களை உடையது குமாரி மாவட்டம். இந்து, கிறித்தவர், முகமதியர் போன்றோர் அதிக அளவில் வாழும் மாவட்டம் குமாரி மாவட்டமாகும். இன்றைய காலகட்டத்தில் தமிழகத்தில் உள்ள ஏனைய மாவட்டத்தில் உள்ள மக்களைவிட அதிக அளவு கல்வி பயின்றோர் வாழ்கின்ற மாவட்டமாகக் குமாரி மாவட்டம் திகழ்கிறது.

## இயல் 2 : சடங்குகள் ஒரு பார்வை

சடங்குகள் மனித வாழ்க்கையின் இன்றியமையாத கூறுகளாகக் காணப்படுகின்ற தன்மை பற்றியும் சடங்குகளால் மனிதர்கள் சமூகத்துடன் எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளனர் என்பது பற்றியும் இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளது. சடங்குகள் எல்லா நாட்டினராலும் எல்லாக் குலத்தினராலும் கடைப்பிடிக்கப்பட்டாலும் ஒவ்வொரு குலத்தாரும் தம் குலத்திற்கென்று ஒரு வரையறை உண்டாக்கி அவற்றைக் கடைப்பிடிக்கின்றனர். மக்கள் நெருக்கடியான காலங்களில் உண்டாகும் தீமைகளைக் சடங்குகள் செய்து நீக்கிக் கொள்வர். ஒவ்வொரு மதத்தினாரிடையேயும் பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு ஆகிய சடங்குகள் நிகழ்த்தப்பெறும் விதம் பற்றி இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளது. சமயச் சடங்கு, வாழ்க்கை வட்டச் சடங்கு எனச் சடங்குகளை இருவகைப்படுத்தலாம். வழிபாடு தொடர்பாக நடத்தப்படும் சடங்குகள் சமயச் சடங்குகள் ஆகும். பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு காலகட்டத்திலும் செய்யப்படும் சடங்குகள் வாழ்க்கை வட்டச் சடங்குகளாகும். சடங்குகள் மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. சமூக வாழ்க்கையின் இன்றியமையாத கூறாகச் சடங்குகள் காணப்படுகின்றன. ஒப்பாரி என்பது ஒப்புச்

சொல்லி அழுதல் என்பதாகும். இறந்தவாரின் ஆன்மா சாந்தியடைவதற்காக ஒப்புச் சொல்லி அதாவது அவர் உலகத்தில் வாழ்ந்த காலத்தில் செய்த நற்காரியங்களைச் சொல்லி அழுதல் ஆகும். சடங்குகள் எல்லா நாட்டினராலும், இனத்தினராலும், மதத்தினராலும் கடைப்பிடிக்கப்பட்டாலும் நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம், மதத்திற்கு மதம் வேறுபடுகின்றன.

## இயல் 3 : இலக்கியத்தில் சடங்குகள்

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை அனைத்து இலக்கியங்களிலும் சடங்குகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்விலக்கியங்களில் சடங்குகள் தொடர்பாக இடம்பெற்றுள்ள செய்திகள் அனைத்தும் திரட்டப்பட்டு இவ்வியலில் பகுத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இறை வழிபாட்டுச் சடங்குகள் இறை நம்பிக்கை சார்ந்த சடங்குகளாகக் காணப்படுகின்றன. திருவாதிரை நாளை மக்கள் கொண்டாடிய விதம், பாவையர் நீராடுதல் குறித்த செய்திகள், தெய்வத்திடம் அருள் வேண்டிச் செய்யப்படும் சடங்குகள், திருமணத்திற்காக வேண்டுதல், குழந்தைச் செல்வம் இல்லாதவர்கள் கருவுற வேண்டுதல் போன்ற பல சடங்குகள் குறித்த செய்திகள் இலக்கியங்களில் இடம்பெறுகின்றன. மார்கழி மாதம் பெண்கள் நோன்பு நோற்று நீராடுதல் குறித்த செய்தியும் நீராடும் பெண்களின் தாயார் அருகில் நின்று நீராடும் முறைமைகளை விளக்கிச் சொல்வதும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. கருவுற வேண்டிப் பெண்கள் நோன்பு நோற்றல், இறைவேண்டல் குறித்த செய்தியும் இலக்கியங்களில் காணப்படுகின்றன. விரிச்சி கேட்டல் நிகழ்வும் இலக்கியத்தில் காணப்படுகிறது. விரிச்சி கேட்டல் என்பது நற்சொல் கேட்டல் என்னும் பொருண்மை உடையது. குழந்தைக்குப் பெயாரிடும் நிகழ்வு சங்க காலம் முதல் சடங்காகச் செய்யப்பட்டு வருகிறது.

## இயல் 4 : பிறப்புச் சடங்கு

விளவங்கோடு வட்டாரத்திற்குட்பட்ட கிராமங்களில் குழந்தை பிறப்பதற்கு முன்னிருந்தும் குழந்தை பிறந்து ஒரு குறிப்பிட்ட வயதை எட்டும் வரைக்கும் சடங்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. சடங்குகள் செய்வதன் மூலம் குழந்தையின் எதிர்காலம் நன்றாக அமையும் என்பது அவர்களது நம்பிக்கை. மதத்திற்கு மதம் பிறப்புச் சடங்கு வேறுபடுகிறது. ஒவ்வொரு மதத்தினராலும் எவ்வாறு பிறப்புச் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது என்பது பற்றி இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளது. கருவுறுதல்

முதல் குழந்தை வளர்ந்து அதனுடைய முதல் பிறந்த நாள் வரைக்கும் நடைபெறும் சடங்குகள் பிறப்புச் சடங்குகளாகும்.

## இயல் 5 : பூப்புச் சடங்கு

ஒரு பெண்ணின் வாழ்வில் பூப்படைதல் என்பது முக்கியமான நிகழ்வாகக் காணப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் விளவங்கோடு வட்டாரத்திற்குட்பட்ட கிராமத்திலுள்ள மக்களால் பூப்புச் சடங்கு மிகுந்த கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் ஒரு சில மக்களால் மட்டுமே கொண்டாடப்படுகிறது. பெண் திருமணத்திற்குத் தயாராகிவிட்டாள் என்பதற்கு அடையாளமாக நடத்தப்படும் பூப்புச் சடங்கு பற்றி இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளது. பூப்பெய்திய பெண்ணை வடமொழியில் 'புஷ்பவதி" என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றனர். பருவ முதிர்ச்சியின் காரணமாகவே பெண்கள் பூப்படைகின்றனர். பெண்கள் பூப்படைந்து விட்டால் தீட்டாகக் கருதி எந்தப் பொருளையும் தொடக்கூடாது என்றும் அவ்வாறு பொருட்களைத் தொடாமல் வாழ்ந்ததால் பூப்படைந்த பெண்கள் 'கலந்தொடா மகளிர்" என்றும் அழைக்கப்படுகின்றனர். ஒரு சில மக்கள் பூப்புனித நீராட்டுவிழா என்று அழைப்பிதழ் அச்சாக்கம் செய்து சடங்குகளை நிறைவேற்றுகின்றனர்.

## இயல் 6 : திருமணச் சடங்கு

மணமென்பது மனமொத்தலாகும். குடும்பத்தில் காணப்படும் சடங்குகளில் சிறப்பான சடங்காகத் திருமணம் அமைகிறது. பிற சடங்குகளை ஒருசில மக்கள் கடைப்பிடிக்காவிட்டாலும் திருமணச் சடங்கு அனைவராலும் கடைப்பிடிக்கப்படும் ஒன்றாகக் காணப்படுகிறது. கன்னியாகுமாரி மாவட்ட மக்களின் திருமணம் மதத்திற்கு மதம் வேறுபடுகிறது. ஒவ்வொரு மதத்தினரும் எவ்வாறு திருமணம் செய்கின்றனர் என்பது பற்றி இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளது.

## இயல் 7 : இறப்புச் சடங்கு

ஒருவனுக்கு எந்த நேரத்தில் இறப்பு நோரிடும் என்பது எவராலும் தீர்மானிக்க முடியாத ஒன்றாகக் காணப்படுகிறது. ஆனால் ஒருவர் இறந்து விட்டால் பல்வேறு சடங்குகள் செய்து பிணத்தை எரிக்கின்றனர் அல்லது புதைக்கின்றனர். இறப்புச் சடங்கு மதத்திற்கு மதம் வேறுபடுகிறது. ஆனால் எல்லா மதத்தினரும் சடங்குகள் செய்கின்றனர். ஒவ்வொரு சமயத்தினாரிடையே காணப்படும் இறப்புச் சடங்குகள் குறித்து இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமாரி மாவட்டத்தில்

பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் இந்து, கிறித்தவ, முகமதியாரிடையே இறப்புச் சடங்கு முறையில் பல்வேறு மாறுபாடுகள் காணப்படுகின்றன. ஆராயும்போது அனைத்துச் சமயத்தினரும் இறப்பினைச் சடங்காக நடத்துகின்றனர். அவ்வாறு சடங்குகள் நடத்துவதன் மூலம் இறந்தவாரின் ஆத்மா சாந்தியடையும் என்பது மக்களின் நம்பிக்கையாகவே காணப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் இறந்தவரை நினைத்துச் சடங்கு செய்கின்றனர். இறப்புச் சடங்குகளின் நோக்கம் இறந்தவரை இருப்போரினின்று பிரித்து, முன்னால் இறந்து போன மூதாதையருடன் சேர்ப்பதாகும். இறந்தவர்களின் நினைவாகச் சமாதி கட்டுகின்றனர். விளவங்கோடு வட்டத்தில் வாழும் மக்களில் அதிகமானோர் இறந்தவரைப் புதைத்துக் கல்லறை எழுப்புகின்றனர். இறந்தவரை அடக்கம் செய்யச் செல்லும் போது ஊர்வலமாகச் செல்கின்றனர்.

ஆய்வு முடிவுரையில் ஒவ்வோர் இயல் வாயிலாகக் கண்டறியப்பட்ட முடிவுகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. முடிவுரையைத் தொடர்ந்து துணை நூற்பட்டியலும் பின்னிணைப்புகளும் தரப்பட்டுள்ளன.